தமிழக சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, 1968 மார்ச் 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனுர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினு எண்கள் 266, 267, 268, 269 தள்ளிவைக்கப்படுகின்றன.

மதுரை மாவட்டத் தமிழாசிரியர் மன்றம்

***270 வினு—திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழக அரசுக்கு வேண்டுகோள் என்ற தலைப்பிட்டு மதுரை மாவட்டத் தமிழாசிரியர் மன்றம் என்ற அமைப்பிலிருந்து 16-7-1967-ம் தேதியில் அரசாங்கத்திற்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு அரசாங்கத்திற்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) முறையீடு ஒன்றும் வரவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : அப்பீல் டு தி கவர்ன்மெண்ட் ஆப் மெட்ராஸ் என்ற பெயரிலே கொடுக்கவில்லையென்றாலும், தமிழ் ஆசிரியர்கள் சங்கத்திலிருந்து வேறு எந்தப் பெயராலும் தலைப்பு கொடுத்து அம்மாதிரி ஒரு அறிக்கை வந்திருக்கிறதா ? அப்படியிருந்தால் அவர்களுடைய வேண்டுகோள்கள் என்னென்ன ? என்னென்ன பரிகாரம் எடுப்பதற்கு அரசு முயற்சித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விடையிலே அப்படி முறையீடு வரவில்லை என்று குறிப்பிட்டேன். அந்த சங்கத்திலிருந்து எதுவும் வராத காரணத்தால்தான் அந்த விடை தரப்படுகிறது. அப்படி ஏதாவது இருக்குமானால் அதை அனுப்பி வைப்பார்களானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. தருமலிங்கம் : தமிழ் ஆட்சி மொழியாகவும், பயிற்சி மொழியாகவும் அமைந்துள்ள இன்றைய சூழ்நிலையில் தமிழ் மொழிக்கு ஊக்கம் அளிக்கும் முறையில் முதல் நிலை தமிழ் ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்றுவதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தலைமை ஆசிரியர்களுக்கு சில தகுதிகளும் தன்மைகளும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குரியவர்கள்தான் ஆசிரியர்களாக இருந்தாலும் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். முதல்நிலை தமிழ் ஆசிரியர்களாக இருந்தாலும், கணித இயல் ஆசிரியர்களாக இருந்தாலும், ஆங்கில ஆசிரியர்களாக இருந்தாலும் உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள்.

திரு. ஆர். கருப்பையா : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழ் படிக்கின்றவர்களுக்கு புலவர் பட்டம் கொடுக்கப்படுகிறது. ஆனால் சென்னை பல்கலைக்கழகத்திலே நான்கு ஆண்டுகள் தமிழ் படித்தும் கூட வித்துவான் என்று வடசொல்லிலேதான் பட்டம் கொடுக்கிறார்கள். இனிமேலாவது இங்கே புலவர் என்ற பட்டம் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது இனி பரிசீலிக்கப்படும்.

தொழில் நுட்பப்பயிற்சி நிறுவன ஆசிரியர்கள்

*271 வினு—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) தமிழக அரசு நடத்தும் தொழிற்பயிற்சி பள்ளிகளில் பணி யாற்றும் எல்.எம்.இ. பட்டம் பெற்றவர்களுக்கும், certificate holder களுக்கும் சம்பள விகிதத்தில் ஏதாவது வித்தியாசம் உண்டா ?

(இ) பி.எஸ்.ஸி. படித்து விட்டு இப்பள்ளிகளில் கணித ஆசிரியர் களாக பணி புரிபவர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தில் ஒரே வகையைச் சேர்ந்த பதவிகளில் இருப்பவர்களில், சான்றிதழ் வைத்துள்ளவர்களுக்கும், எல்.எம்.இ டிப்ளொமோ பெற்றுள்ளவர்களுக்கும் சம்பள விகிதத்தில் எவ்விதமான வேறுபாடும் இல்லை.

(இ) பி.எஸ்.ஸி. பட்டம் பெற்று, கணித ஆசிரியராக இருப்பவர்களின் சம்பள விகிதம் ரூபாய் 125—5—175—102—25 ஆகும்.

திரு சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, பி.எஸ்ஸி. படித்து விட்டு கணித ஆசிரியர்களாக, தொழில் பயிற்சி நிறுவனங்களிலும் சரி, மற்ற உயர்நிலைப் பள்ளிகளிலும் சரி வருகிறார்களே, அதுபோல பி.ஈ. பாஸ் செய்துவிட்டு வருகிறவர்களை கணித ஆசிரியர்களாக எடுத்துக் கொள்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கணிதம் படித்தவர் களுக்கு பி.எஸ்ஸி. பட்டம் தரப்படுகிறது.

திரு சி. கோவிந்தராசன் : கணித ஆசிரியர்கள் என்று அவர்களை எடுத்துக்கொண்டு, கணித ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் அவர் களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பி.எஸ்ஸி. படித்தவர்கள் கணித ஆசிரியர்களாக இருக்கலாம். அவர்களுக்கு கணித ஆசிரியர் களுக்குத் தரப்படுகின்ற சம்பளம் கொடுக்கப்படுகிறது.

THIRU K. VINAYAKAM : Whereas the duration of the L.M.E. course is spread over three years and that of the Survey course is spread over one year, is there any disparity in the scales of pay if they are employed by the Government of Madras ? I am not concerned with the Government of India. The Hon. Minister in his answer has stated that there is no disparity in the scales of pay when they are employed by the Government of India. I want to know whether there is any disparity when they are employed by the Government of Madras ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்களுடைய பட்டப்படிப்பு விவரமும், மற்றைய விவரங்களும் குறிப்பில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.